[30th August 1961

மூலம் இந்தச் சலுகை கொடுக்கப்பட்டு வருகிறது. இதை எஜுகேஷன் டிபார்ட்டிமெண்ட் மூலமாகக் கொடுப்பதற்கு வழியில்லை.

SRIMATHI **HEMALATHA DEVI**: இந்தத் தேர்வு கட்டண சலுகையை வருஷ கடைசியிலே கொடுப்பதினாலே மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. இதை மறு இன்ஸ்டால்மென்டிற்கும் முன்பாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா?

THE HON. SRI P. KAKKAN: இதை முதல் இன்ஸ்டால் மெண்டிலேயே கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

Bridge across the Coleroon

*** 1439** *Q.*—SRI **T. K. SUBBIAH**: கனம் பொது மாராமத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) திருவானூருக்கு அருகே கொள்ளிடத்தில் அமைக்கப் பட்டிருக்கும் பாலத்திற்கு எஸ்டிமேட் தயாராகிவிட்டதா? அதன் மதிப்பீடு தொகை எவ்வளவு?

(இ) 1961-62-ல் பட்ஜெட்டில் இதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(உ) எப்போது தொடங்கப்படும்?

THE HON. SRI P. KAKKAN: (அ) No. Sir.

(இ) Rs. 1,00,000.

(உ) The work will be taken up for execution after the estimate is finalized and technically sanctioned.

SRI **T. K. SUBBIAH**: இதற்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே 14 லட்ச ரூபாய் சென்ட்ரல் ரோட்டு பண்டிலிருந்து சாங்ஷன் ஆகிவிட்டது. குறிப்பிட்ட காலத்தில் இது கட்ட முடியாமல் போனால் இந்தப் பணம் வாபஸ் ஆகிவிடுமாகையால் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI P. KAKKAN: ரொம்ப நாளாக பரிசிலனை செய்த பிறகு முதலிலே மத்திய அரசாங்கம் மறுத்தார்கள். பிற்பாடு ஒத்துக்கொண்டார்கள். காஸ்வே கட்டுவதை நிறுத்தி விட்டு ஓவர் பிரிட்ஜ் கட்டுவதற்காக பரிசீலனைக்கு சீப் என்சினி யருக்கு அனுப்பப்பட்டது. மேலும் பூரணமாக எல்லாத் தகவல் களும் சேகரித்தபிறகு, மத்திய அரசாங்கத்தின் அங்கீகாரம் பெரு வதற்கு அனுப்பப்படும்.

SRI **R. SRINIVASA IYER**: திருச்சி, தஞ்சாவூர் இந்த இரண்டு ஜில்லாக்களுக்கும் மிகவும் உபயோகமாக இருக்க 14 லட்சம் ரூபாய் செலவில் ஒரு ஓவர் பிரிட்ஜ் கட்ட பணம் சாங்ஷன் ஆகி

யிருக்கிறது. இந்த வேலையை இந்த வருஷத்திலேயே எடுத்துக் கொண்டு தொடங்காவிட்டால் பணமும் லாப்ஸ் ஆகிவிடும். அடுத்த வருஷத்திலே ஜாஸ்தி தொகை செலவாகும். திரும்ப, திரும்ப இதுமாதிரி ரிவைஸ் பண்ணிக்கொண்டே போனால், விலைவாசிகளும் ஏறிக்கோண்டுபோவதினால் பணமும் அதிகமாகச் செலவாகும். ஆகையால் இன்னும் தாமதிக்காமல் இந்த வேலையை எடுத்துக்கொள்ள உத்திரவு போடுவார்களா?

THE HON. SRI P. KAKKAN: இந்தப் பாலம் மூன்று ஜில்லாக்களுக்கும், அதாவது தஞ்சை, திருச்சி, ராமநாதபுரம், உபயோகமாக இருக்கும். இதற்குப் பெரம்பலூர் ரஸ்தா என்று பெயர்; முதலிலே ஒரு காஸ்வே கட்டுவதாக இருந்தது. பிறகு ஒரு ஓவர் பிரிட்ஜ் கட்டினால் மிகவும் உபயோகமாக இருக்கும் என்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆகையால் இதை பரிசீலனை செய்து வருகிறார்கள். எல்லாத் தகவல்களும் சேகரித்த பிறகு மத்திய சர்க்காரின் அங்கீகாரம் பெறமுடியும். இந்த பண்ட் லாப்ஸ் ஆகுமா என்பதைப்பற்றி தனியாக ஒரு கேள்வி போட்டால், பதில் அளிக்கப்படும்.

SRI R. SRINIVASA IYER: மதுரையிலே வைகை ஆற்றின் குறுக்கே ஒரு குழாய் போட்டு, ஒரு காஸ்வேயும் அது தவிர ஒரு பெரிய பாலம் பஸ் போவதற்கு கட்டியிருக்கிறார்கள். அதுமாதிரி ஒரு பெரிய பாலம் கட்டுவதென்றால், 4, 5 வருஷங்களாவது ஆகும். ஆகையால் கீழே போகக்கூடிய ஒரு காஸ்வே பாலம் கட்ட அரசாங்கம் யோசிக்குமா?

THE HON. SRI P. KAKKAN: மதுரை ஒரு பெரிய நகரம். அங்கு ஜனப்போக்குவரத்து ஜாஸ்தியாக இருப்பதனால் பெரிய பாலம் கட்டினார்கள். இங்கு காஸ்வே கட்டுவதாக இருந்தது. பிறகு ஒரு பாலம் கட்டவேண்டுமென்று தகவல்கள் சேகரித்து வருகிறார்கள்.

SRI T. K. SUBBIAH: பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே இடத்தில் பாலம் கட்டுவதற்கு பணம் சாங்ஷன் ஆகி இரும்பு கம்பிகள் வாங்கப்பட்டு வேறு இடத்திற்கு மாற்றப்பட்டது. இவ்வாறு 15 ஆண்டுகளுக்கு காலந் தள்ளிப்போட்டதின் காரணம் என்ன? இதை சீக்கிரத்திலே கட்டி முடிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI P. KAKKAN: அரசாங்கம் இது முக்கியமானது என்று கருதித்தான் காஸ்வே கட்டுவதாக இருந்ததை பாலம் கட்டுவதற்கு முடிவு எடுத்திருக்கிறார்கள். முதலிலே மத்திய சர்க்கார் அங்கீகாரம் கொடுக்கவில்லை. இப்பொழுது கொடுத்திருக்கிறது. இப்போது ஒரு பாலம் கட்டினால் ரூ. 36 லட்சம் ஆகும் என்று தெரிகிறது. சீக்கிரம் முடிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டுவருகிறார்கள்.